செய்தி வெளியீடு எண்: 389/2017 நாள் : 29.06.2017

**வேலூர் மாவட்டத்தில் வசிக்கும் சிறுபான்மையின மக்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு! வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்னையினர் நலத்துறையின் சார்பில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் அறிவுரை!!**

வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் சிறுபான்மையினருக்கான கடன் உதவித் திட்டங்கள் மற்றும் கடன் பெறும் வழிமுறைகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது:

வேலூர் மாவட்டத்தில் உள்ள மக்கள் தொகையில் பெரும்பாலும் சிறுபான்மையினர்களாகக் கருதப்படும் இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள், புத்த மதத்தினர் பார்சிகள் மற்றும் ஜெயின் மதங்களைச் சேர்ந்தவர்கள் வசித்து வருகின்றனர். இவர்களின் வாழ்க்கை பொருளாதாரத்தை மேம்படுத்தும் விதத்தில் தமிழக அரசின் மூலம் பல்வேறு கடன் உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் ஒரு முத்தாய்ப்பாக கூட்டுறவு நகர வங்கிகளின் மூலமாக தகுதியான தொழில் முனைவோர்களுக்கு 10 இலட்சம் முதல் 30 இலட்சம் வரை கடனுதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. சிறுபான்மையின மக்கள் வளர்ச்சியடைந்தால் இந்நாடு வளம் பெறும். வேலூர் மாவட்டத்தில் உள்ள சிறுபான்மையினர்களுக்கு அந்தந்த பகுதிகளில் உள்ள கூட்டுறவு நகர வங்கிகளில் சிறுபான்மையினருக்காக வழங்கப்படும் கல்விக் கடன், தனி நபர் கடன் திட்டம், வியாபாரம், தொழில் தொடங்கிடவும் ஏற்கனவே செய்து வரும் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கும் கடன்கள் என தனித்தனியே விண்ணப்பங்கள் பெறப்படுகிறது. கடன் பெற விரும்பும் சிறுபான்மையினர் இவ்விண்ணப்பங்களை பெற்று முறையே பூர்த்தி செய்து உரிய ஆவணங்கள் இணைத்து குறித்த காலத்தில் கூட்டுறவு நகர வங்கிகளில் அளித்து தாங்கள் கோரியுள்ள உதவிகளை பெற்றுக்கொள்ளலாம்.

சிறுபான்மையினருக்கான கடன் உதவி திட்டங்களை பெறும் வழிமுறைகளை பற்றி அறிந்து கொள்ள தொலைபேசி எண்:0416 2254012, 9444267094, 9942107078 என்ற எண்களுக்கு அலுவலக நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை தொடர்பு கொண்டோ அல்லது மாவட்ட ஆட்சியர் அலுவலக முதல் தளத்தில் அமைந்துள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் விண்ணப்பங்களையும் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு.ஜெயபிரகாஷ், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் திரு.திருகுணஅய்யப்பதுரை மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: 29/6/17
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், வேலூர்-9.